
இனிய தமிழால்
இறைவனில் இணைவோம்

TAMILCATHOLIC.ORG



**Bay Area Tamil Catholic Community**




# வீடு மந்திரித்தல்

# வீடு மந்திரித்தல்

குரு : பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே!
எல் : ஆமென்

குரு : இவ்வீட்டிற்குச் சமாதானம் உண்டாவதாக!
எல் : இங்கு வாழ்வோர் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக!
(அல்லது)
குரு : இயேசு கிறிஸ்துவின் அன்பும், சமாதானமும் இந்த இல்லத்திலும், இங்கு வாழ்வோரிலும் என்றும் தங்குவதாக!
எல் : ஆமென்

(உலகின் ஒளியான இயேசு இவ்வில்லத்தில் பிரசன்னமாகின்றார் என்பதற்கு அடையாளமாக குத்துவிளக்கோ, மெழுகுதிரியோ ஏற்றலாம்)

குரு: இறைமகன் இயேசு மனுவுரு எடுத்து தூய சூசை மரியாளோடு தங்கி வாழ்ந்தார். அவர் இந்த இல்லத்திலும் வந்து தங்குமாறு வேண்டுவோம். இறைமகன் அன்பில் நம்மை வளர்ப்பாராக, மகிழ்ச்சியில் நம்மோடு கலந்திருப்பாராக, துன்ப வேளையில் அவர் நமக்கு ஆறுதலாக இருப்பாராக! அனைத்திற்க்கும் மேலாக இந்த வீடு அமைதியின் இருப்பிடமாக அமைவதாக!

எல் : ஆமென்



## *கிறிஸ்து கற்பித்த செபம்*

**பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக;
உம்முடைய இராச்சியம் வருக;
உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக.**

**எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்.எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களை சோதனையில் விழவிடாதேயும், தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும்.
ஆமென்.**

## *மங்கள வார்த்தை செபம்*

**அருள் நிறைந்த மரியே வாழ்க!
கர்த்தர் உம்முடனே;
பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே;
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.**

**அர்ச்சிஷ்ட மரியாயே சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்.
ஆமென்.**

## *திருத்துவப் புகழ்*

**பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.
ஆதியிலே இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.**

## பிற பாடல்கள்/செபங்கள்:

### *ஆண்டவரே ஈசோப்புல்லினால்*

**ஆண்டவரே ஈசோப்புல்லினால் என்மேல் தெளிப்பீர்**
**நானும் தூய்மை ஆவேன்**
**நீரே என்னைக் கழுவ நானும்**
**உறைபனி தனிலும் வெண்மையாவேன்**
**இறைவா உமது இரக்கப் பெருக்கத்திருக்கேற்ப**
**என்மேல் இரக்கம் கொள்ளுவீர்**
**பிதாவும் சுதனும் தூய ஆவியும்**
**துதியும் புகழும் ஒன்றாய்ப் பெருக**
**ஆதியில் இருந்தது போல்**
**இன்றும் என்றும் நித்தியமாகவும் - ஆமென்.**

### *தேவாலய வலப்புறமிருந்து*

**தேவாலய வலப்புறமிருந்து**
**தண்ணீர் புறப்படக் கண்டேன் - அல்லேலூயா**

**அந்தத் தண்ணீர் யாரிடம் வந்ததோ**
**அவர்கள் யாவருமே**
**ஈடேற்றம் பெற்றுக் கூறுவர்**
**அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா**

**ஆண்டவரைப் போற்றுங்கள்**
**ஏனெனில் அவர் நல்லவர்**
**அவர் தம் இரக்கம் என்றென்றும் உள்ளதே**
**பிதாவும் சுதனும் தூய ஆவியும்**
**துதியும் புகழும் ஒன்றாய் பெறுக**
**ஆதியில் இருந்ததுபோல்**
**இன்றும் என்றும் நித்தியமாகவும் - ஆமென்**



## நற்செய்தி: லூக்கா 10:38-42

38 அவர்கள் தொடர்ந்து சென்று
கொண்டிருந்தார்கள். அப்போது இயேசு ஓர்
ஊரை அடைந்தார். அங்கே பெண் ஒருவர்
அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவர் பெயர்
மார்த்தா. 39 அவருக்கு மரியா என்னும் சகோதரி
ஒருவர் இருந்தார். மரியா ஆண்டவருடைய
காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக்
கேட்டுக் கொண்டிருந்தார். 40 ஆனால் மார்த்தா
பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி
இயேசுவிடம் வந்து, ஆண்டவரே, நான்
பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத்
தனியே விட்டு விட்டாளே, உமக்குக்
கவலையில்லையா? எனக்கு உதவி புரிய
அவளிடம் சொல்லும் என்றார். 41 ஆண்டவர்
அவரைப் பார்த்து, மார்த்தா, மார்த்தா! நீ
பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக்
கலங்குகிறாய். 42 ஆனால் தேவையானது ஒன்றே.
மரியாவோ நல்ல பங்கைத்
தேர்ந்தெடுத்துக்கொண்டாள்: அது
அவளிடமிருந்து எடுக்கப்படாது என்றார்.

– **இது வாழ்வுதரும் கிறிஸ்துவின் நற்செய்தி!**

**எல்: கிறிஸ்துவே உமக்குப் புகழ்.**

(எல்லோரும் ஒவ்வொரு அறையாக குருவைப் பின்தொடர்ந்து செல்வோம். குரு குடும்பத்தவரோடு இணைந்து செபத்தோடு தீர்த்தம் தெளிப்பார்)

## நுழைவாயில் (Entrance):

"நானே உண்மையும் வழியும்" என்று கூறிய இறைவா! இவ்வாயிலின் வழியாக உள்ளே நுழையும் போதும், வெளியேரும் போதும் எங்களைப் பாதுகாத்தருளும். இவ்வீட்டிற்கு வருகைதரும் ஒவ்வொருவரும் எம் விருந்தோம்பலின் வழியாக உமது அன்பையும் அமைதியையும் நிறைவாய் கண்டடைவார்களாக! எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்!

எல் : ஆமென்

## வரவேற்பு அறை (Living Room):

இறைவா! இந்த அறைக்கு வருகைதரும் அனைவரையும் ஆசீர்வதியும்! நாங்கள் எல்லோரும் இறைவனின் அன்பால் பிணைக்கப்பட்டு, அன்பினால் ஆசீர்வதிக்கப்படுவோமாக! எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்!

எல் : ஆமென்



## பாடல் 1:

நீ செய்த நன்மை நினைக்கின்றேன் - என்
நெஞ்சுருக நன்றி சொல்கின்றேன்
இறைவா இறைவா இறைவா இறைவா

உண்டிட உணவும் உடையுமே கொடுத்து
ஒரு குறையின்றிக் காத்து வந்தாய் - ஒரு
அன்னையைப் போலவே அன்பினைப் பொழிந்து
அல்லல்கள் யாவையும் தீர்த்து வைத்தாய்

மலருக்குப் பதிலாய் களையெங்கும் தோன்றி
மனதினை நிரப்புதல் பார்த்திருந்தாய் - உடன்
உலரட்டும் என்றே ஒதுங்கி விடாமல்
களைகளை அகற்றிக் காத்து வந்தாய்

## பாடல் 2:

இயேசுவின் இருதயமே - எங்கும்
எரிந்திடும் அருள் மயமே - உந்தன்
ஆசியும் அருளும் சேர்ந்து வந்தால் - எங்கள்
ஆனந்தம் நிலை பெறுமே

இறைவனுக்கிதயம் உண்டு - அந்தக்
இதயத்தில் இரக்கம் உண்டு - என்றும்
இரங்கிடும் இறைவன் இருப்பதனால் - இங்கு
அனைவர்க்கும் வாழ்வு உண்டு

கடவுளின் கருணை உண்டு - அந்த
கருணைக்கு உருவம் உண்டு - அவர்
உருவத்தில் உதித்தெழும் உயிர் அதனால் - எங்கள்
உள்ளத்தில் உவகை உண்டு

இரவினில் தீபமுண்டு - இந்த
இல்லத்தில் ஒளியுமுண்டு - எங்கள்
இருதய அன்பர் விழித்திருந்தால் - எந்த
இரவிலும் காவல் உண்டு

அவற்றை உள்ளன்போடு நிறைவேற்ற ஆற்றலைத் தாரும். உம்முடைய நற்செய்தியின் மதிப்பீடுகளை என்றும் கடைப்பிடித்து, உமக்கு ஏற்ற சாட்சிகளாய் வாழச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்!

எல் : ஆமென்

## கர்த்தர் கற்பித்த செபம்

குரு: தந்தை இறைவன் உங்கள்மீது அன்புகூர்ந்து உங்களுடன் என்றும் வாழ்வாராக!
எல் : ஆமென்

குரு: மீட்பர் இயேசு உங்களோடு தங்கி, உங்களுக்குத் தமது சமாதானத்தை அருள்வாராக!
எல் : ஆமென்

குரு: தூய ஆவி உங்கள்மீது இறங்கி, உங்களுக்கு அனைத்தையும் கற்பிப்பாராக!
எல் : ஆமென்



## சமயலறை (Kitchen):

பசித்திருப்பவர்களை எல்லா நலன்களாலும் நிரப்பும் இறைவா! இந்த சமையலறையில் சமைக்கும் எம்மை உம் அருளாலும் ஆசியாலும் நிரப்புவீராக! எங்கள் அனுதின உணவிற்கு நாங்கள் என்றும் உமக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போமாக! எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்!

எல் : ஆமென்

## சாப்பிடும் அறை (Dining):

விண்ணையும் மண்ணையும் ஆளுகின்ற இறைவா போற்றி ! உடலுக்கு உணவு தந்து, உள்ளங்களை மகிழ்வால் நிரப்பும் அன்பு இறைவா! உம் உதவியினைப் பெறும் நாங்கள் மற்றவரின் நலன்களையும் என்றும் எம் மனதில் கொள்வோமாக! எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்!

எல் : ஆமென்

## படுக்கை அறைகள் (Bed room(s)):

விழித்திருக்கும் போது எம்மைக் காப்பாற்றும் இறைவா! இங்கு கண் அயரும்போது எம்மை உம் கண்ணின் கருவிழியாய் காத்தருளும் இறைவா! எம்மோடு தங்கி, எம்மை உம் அமைதியால் நிறைத்தருளும் இறைவா! கிறிஸ்துவோடு விழித்திருக்கும் நாங்கள், ஓய்வு பெறும்போது உம் அமைதியில் இளைப்பாருவோமாக! எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்!

எல் : ஆமென்

## குளியலறை (bathroom):

அன்பின் அருளூற்றே இறைவா! நீர் எம்மை உம் ஞானத்தாலும் அன்பாலும் உருவாக்கினீரே! எம் உடலையும், உள்ளத்தையும் உம் அருளால் தூய்மைபடுத்தி, புத்துணர்வால் புதுப்பிப்பீராக! எமக்கு நல்ல உடல் நலனை வழங்கி, உம் பணியாற்ற எம்மை ஆசீர்வதிப்பீராக! எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்!

எல் : ஆமென்



(இறுதியாக)

இறைவா! நாங்கள் எங்கள் இல்லத்தில் இருக்கும் போது எங்கள் அடைக்கலமாயிரும்! வெளியே செல்லும்போது எங்கள் துணைவராயிரும்! திரும்பிவரும் பொழுது எங்கள் விருந்தினராயிரும்! இறுதியில், நீ என்றென்றும் வாழும் வான்வீட்டில், உங்கள் தந்தையின் இல்லத்தில் எங்களுக்கு இடம்தாரும்!

எல் : ஆமென்

குரு:

செபிப்போமாக! எங்கள் வானகத் தந்தாய், அன்றாட வாழ்வில் நாங்கள் உம்முடைய அளப்பரிய அன்பையும், நன்மைத்தனத்தையும் உய்துணரச் செய்கின்றீர். அதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். உம்மிடம் நம்பிக்கைக்கொண்டுள்ள இக்குடும்பத்தின் மீது உமது கருணை மிகுந்த பார்வையைத் திருப்பியருளும். இந்த இல்லத்தையும் இதில் வாழ்வோரையும், இங்குள்ள அனைத்துப் பொருட்களையும் ஆசீர்வதித்தருளும். இவர்களுக்கு உம்முடைய அன்பையும் அமைதியையும் தந்தருளும். உடல் நலத்தையும் ஆன்ம பலத்தையும் கொடுத்தருளும். எல்லாப் பாவங்களிலிருந்தும், தீமைகளிலிருந்தும் இவர்களைக் காத்தருளும். வாழ்வின் எல்லா நலன்களாலும் இவர்களை நிரப்பி, மன நிறைவோடு வாழச் செய்தருளும்! அடுத்திருப்போரின் தேவைகளை உணர்ந்து,